CAMVAP
PAVAC

# Canadian Motor Vehicle Arbitration Plan

## கனேடிய மோட்டார் வாகன மத்தியஸ்தத் திட்டம் (CAMVAP)என்றால் என்ன ?

CAMVAP என்பது, வாகன உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்குமிடையில் ஏற்படும் பிணக்குகளை கட்டுப்படக்கூடிய மத்தியஸ்தரினூடாக சுமுகமாகத் தீர்த்துவைக்க அனுமதிக்கும் ஒரு திட்டமாகும். வாகனத்தை உருவமைப்பதில் உள்ள குறைபாடுகள் பற்றிய குற்றச் சாட்டுகள் அல்லது புதிய வாகனத்துக்குரிய உத்தரவாதம் தொடர்பான பிணக்குகள் CAMVAP திட்டத்தின் கீழ் நடுநிலைமை வகித்து மத்தியஸ்தம் பெறத் தகுதியுடையன.



CAMVAP இன் சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன், அதன் சேவைகள் கனடாவின் எல்லா மாகாணங்கள்,மாவட்டங்களிலும் கிடைக்கின்றன.

CAMVAP என்பது பிணக்குகளுக்குப் பயனளிக்கக்கூடிய தீர்வை வழங்க மிகவும் சிறந்த ஒரு வழிமுறையாகும். ஒவ்வொரு பிணக்குக்கும் சுதந்திரமான நடுநிலைமை வகிக்கும் ஒரு மத்தியஸ்தர் நியமிக்கப்பட்டு, வாகன உரிமையாளருக்கும் வாகன உற்பத்தியாளருக்கும் இடையில் நியாயமான ஒரு தீர்ப்பை அவர் வழங்குவார்.

## அடிக்கடி வினவப்படும் வினாக்கள்

கனேடிய மோட்டார் வாகன மத்தியஸ்தத் திட்டத்தில் உள்வாங்கப்படாத மேலதிக கேள்விகள் இருந்தால், அவற்றுக்கான பதில்களை, 1-800-207-0685 என்ற இலக்கத்துடன் தொலைபேசி மூலமாகவோ அல்லது www.camvap.ca என்ற எங்கள் இணையத்தளத்தைத் தரிசிப்பதன் மூலமாகவோ அறிந்துகொள்ளலாம்.

## CAMVAP இன் சேவையை யார் பயன்படுத்தலாம்?

புதிய பாவித்த வாகனங்களின் சொந்தக்காரர்கள், வாடகைக்கு அமர்த்துபவர்கள் உற்பட திட்டத்தின் கீழ் தகைமைகள் இருப்பின் வர்த்தகங்களுக்குச் சொந்தமான வாகனங்களும் CAMVAPஇன் சேவைகளைப்பெற்றுக்கொள்ளலாம்.

## CAMVAPஎவ்வாறு இயங்குகிறது?

தீர்ப்பு ஒன்றை வேண்டி உங்கள் பிணக்கை ஒரு மத்தியஸ்தரிடம் ஒப்படைக்க நீங்கள் உடன்படுகிறீர்கள். அப்போது பிணக்கில் உங்கள் சார்பாகவும் உற்பத்தியாளர் சார்பாகவும் செவிசாய்க்கப்படும் ஒரு விசாரணையை மத்தியஸ்தர் நடாத்துவார். அதில் உங்கள் சார்பாகவும் உற்பத்தியாளர் சார்பாகவும் முன்வைக்கப்பட்ட சாட்சிகள் ஆதாரங்கள் அனைத்தையும் நன்கு பரிசீலனை செய்து, கட்டுப்படவேண்டியதும் இறுதியானதுமான ஒரு தீர்ப்பை மத்தியஸ்தர் வழங்குவார். சில சந்தர்ப்பங்களில் நுகர்வோரும் உற்பத்தியாளரும் மத்தியஸ்தரிடம் செல்ல முன்பே பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளவும் முடியும்.

## CAMVAP எனக்கு எதனைச் செய்யலாம்?

CAMVAPயின் மத்தியஸ்தர்கள், உற்பத்தியாளர்களுக்கு பின்வருமாறு கட்டளையிடமுடியும்.

1. உங்கள் வாகனத்தின் குறைபாட்டை உற்பத்தியாளரின் செலவில் திருத்துவதற்கு,
2. உங்கள் வாகனத்தை திருப்பிக் கொள்வனவு செய்வதற்கு,
3. நீங்கள் ஏற்கனவே வாகனத்தைத் திருத்த செலவுசெய்த பணத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி,
4. உங்கள் சொந்தமாக செலவுசெய்த பணத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி,

நீங்கள் முன்வைத்த பிணக்குக்கு உற்பத்தியாளர் பொறுப்பில்லை என மத்தியஸ்தர் தீர்மானிக்கக் கூடும்.

## ஒரு மொழிபெயர்ப்பாளரின் சேவை எனக்குத் தேவையா?

CAMVAPவிண்ணப்படிவங்களும் அதன் சேவைகளும் பிரஞ்சு,ஆங்கில மொழிகளில் கிடைக்கும். பிரஞ்சு மொழியில் சேவைகளைப்பெற்றுக்கொள்ள நீங்கள் விரும்பினால், உங்கள் விடயத்தைக் கவனிக்கும் எங்கள் கியூபெக் நிர்வாகத்துக்கு மாற்றப்படுவீர்கள். நீங்கள் ஆங்கிலம்,பிரஞ்சு மொழிகள் கதைக்காவிட்டால் ஒரு மொழிபெயர்ப்பாளரின் சேவை உங்களுக்குத் தேவைப்படும்.

இத்திட்டத்தின் சேவைகள் உங்களுக்குக்கிடைப்பதை உறுதிப்படுத்த அத்தகைய நபருடன் சேர்ந்து பணியாற்றுவதில் CAMVAP மகிழ்ச்சியடையும்.

CAMVAP
PAVAC

## Canadian Motor Vehicle Arbitration Plan

### உங்களுக்கும் உங்கள் வாகனத்துக்கும் CAMVAP இன் சேவைகளைப் பெற்றுக்கொள்ளத் தகைமை இருக்கிறதா? . துரிதமாகச் சரிபார்த்தல்

1. உற்பத்தியாளருடனான , உங்கள் பிணக்கு, உங்கள் வாகனத்தை உருவமைப்பதில் உள்ள குறைபாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றியதா அல்லது புதிய வாகனத்தின் உத்தரவாதத்தை உற்பத்தியாளர் கையாளும் நடைமுறைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பானவையா?
2. நீங்கள் கனடாவில் வசிப்பவரா? மேலும் உங்கள் வாகனம், கனடாவில் உற்பத்தி, விற்பனைக்கு அதிகாரம் பெற்ற ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதா?
3. உங்கள் வாகனம் உங்கள் சொந்தத் தேவைக்கு அல்லது குடும்பத்தின் தேவைக்குப் பயன்படுத்தப்படுகிறதா? ( வர்த்தகத் தேவைகளுக்காக உபயோகிப்பது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு எங்கள் இணையத்தளத்தைப் பார்க்கவும் )
4. உங்கள் வாகனம் இவ்வாண்டுக்கு உரிய மாதிரியா அல்லது சென்ற நான்கு ஆண்டுகளுக்குரிய மாதிரி வடிவமைப்பா?
5. உங்கள் வாகனம் 160,000 கிலோமீற்றர்களுக்குக் குறைவாக ஓடியிருக்கிறதா?
6. நீங்கள் உற்பத்தியாளரின் பிணக்குகளைத் தீர்க்கும் முறையைப் பின்பற்றினீர்களா? (உங்கள் உரிமையாளரின் கைநூலைப்பார்க்கவும்)
7. பிணக்குகளைத் தீர்ப்பதற்கு விற்பனையாளருக்கும் உற்பத்தியாளருக்கும் நீங்கள் போதிய காலத்தையும் சந்தர்ப்பத்தையும் வழங்கினீர்களா?

### CAMVAP மிகவும் துரிதமானது, இலவசமானது, சினேகபூர்வமாது, இலவசமானது, இறுதியானது என்னால் நீதிமன்றம் செல்ல முடியுமா?

நுகர்வோர் என்ற வகையில் தெரிவு உங்களுடையது. உங்கள் உரிமையைக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம் அல்லது CAMVAP இன் சேவையை நீங்கள் பயன்படுத்தலாம். ஆனால் இரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாது.

### விசாரணை எங்கே நடைபெறும்?

உங்கள் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால், நீங்கள் வசிக்கும் ஊரில் அல்லது அதற்குக் கிட்டிய இடத்தில் விசாரணை நடைபெறும்.

### இன்னும் மேலதிக தகவல்கள் அவசியமா?

மேலே கூறப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் ஆம் என நீங்கள் பதிலளித்தால் CAMVAPஇன் சேவையைப் பெற நீங்கள் பெரும்பாலும் தகுதி பெறுவீர்கள்.

மேலதிக தகவல்களை 1-800-207-0685 என்ற இலக்கத் தொலைபேசியில் எமது திட்ட நிர்வாகிகளிடம் இருந்தும், அல்லது www.camvap.ca என்ற எமது இணையத்தளத்தினூடாகவும் அறிந்துகொள்ளலாம்.

### கலந்துகொள்ளும் உற்பத்தியாளர்கள்

| | |
|---|---|
| கிறிஸ்லர் கனடா இன்க். | 1-800-465-2001<br>1-800-387-9983 (கியூபெக) |
| கனடா மோட்டர்ஸ் கம்பனி லிமிட்டட | 1-800-565-3673 |
| கனடா ஜெனரல் மோட்டர்ஸ் லிமிட்டட் | 1-800-263-3777 (ஆங்கிலம)<br>1-800-263-7854 (பிரஞ்சு)<br>1-800-263-3830 ( டிடிவை) |
| கனடா ஹொன்டா இன்க். | 1-888-946-6329 (ஹொன்டா)<br>1-888-922-8729 (அக்குரா) |
| ஹயுன்டை ஓடோ கனடா கோர்பரேஷன். | 1-800-461-8242<br>1-800-461-5695 (கியூபெக) |
| ஜகுவார் கனடா இன்க். | 1-800-668-6257 |
| கேஜஎ கனடா இன்க். | 1-877-542-2886 |
| லேன்ரோவர் குரூப் கனடா இன்க். | 1-800-346-3493 |
| மஸ்டா கனடா இன்க். | 1-800-263-4680 |
| மேர்ஸிடஸ்-பென்ஸ் கனடா இன்க். | 1-800-387-0100 |
| நிஸான் கனடா இன்க். | 1-800-387-0122 (நிஸ்ஸான்)<br>1-800-361-4792 (இன்பினிடி) |
| நோர்த் அமெரிக்கன் போஸ்சே கார்ஸ் இன்க். | 1-800-767-7243 |
| சுபாரு கனடா இன்க். | 1-800-894-4212 |
| டொயோடா கனடா இன்க். | 1-888-869-6828 (டொயோட்டா)<br>1-800-265-3987 (லெக்ஸஸ்) |
| வோக்ஸ்வோகன் கனடா குரூப் இன்க். | 1-800-822-8987 (வொக்ஸ்வோகன)<br>1-800-822-2834 (அவ்டி) |
| வோல்வோ கார்ஸ் ஒவ் கனடா கோர்ப். | 1-800-663-8255 |

**1-800-207-0685**

**www.camvap.ca**